

தி.மு.கழக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உடன்பிறப்பு சுரேஷ் என்பவரின் மகள் மைதிலிக்கு கல்லூரி படிப்பிற்கான கல்வி உதவித் தொகை ரூபாய் 25000ற்கான காசோலையை கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அனுப்பப்பட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான சு.முத்துசாமி மாணவிக்கு காசோலையை வழங்கினார். நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### நகரச் செயலாளர் எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. தலைமையில்,

# பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில், முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## திருச்சி என்.சிவா எம்.பி. - அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை! வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஏப்.19 -

பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில், நகர கழகச் செயலாளர் எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ., தலைமையில், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி என்.சிவா.எம்.பி., போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, கழகத் துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க, பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் இன்று (19.04.2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் நகர கழகச் செயலாளர் எம்.பிரபாகரன் தலைமை வகிக்கிறார். 6ஆவது வார்டு கழகச் செயலாளர் ஜே.எஸ்.ஆர்.கருணாநிதி வரவேற்புரையாற்றுகிறார். நகர அவைத்தலைவர் கோ.ரெங்கராஜ், நகர துணைச் செயலாளர்கள் நூ.சபியுல்லா, ஆர்.ரெங்கநாதன், கல்பனா முத்துக்குமார், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர்.ராஜேந்திரன், கே.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் மாநிலங்களவை கழக குழுத் தலைவர் திருச்சி என்.சிவா.எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கே.என்.அருண்நேரு எம்.பி., மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். நகர கழக பொருளாளர் முகமது அசாருதீன் நன்றியுரையாற்றுகிறார்.

இதில் மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் தனியார் திருமண மண்டபத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் த.ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.ராஜகுமார், மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர். தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணசங்கரி மற்றும் பலர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

சேலம் மத்திய மற்றும் விருதுநகர் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் மத்திய | வீரபாண்டியார் அரங்கம், கலைஞர் மாளிகை, சேலம். |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | விருதுநகர் தெற்கு | கந்தசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், விருதுநகர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 16-04-2025



